# அசோக் நகர் மெட்ரோ நிலையத்தில் பாரம்பரிய விளையாட்டுகள்



பாரம்பரிய விளையாட்டுக்களை ஊக்குவித்தலின் ஒரு பகுதியாக சென்னை அசோக்நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை பரமபதம் விளையாடும் மாணவர்கள்.

**சென்னை, ஜூலை 19:** அசோக் நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில் பாரம்பரிய விளையாட்டு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

தமிழகத்தில் பாரம்பரிய விளையாட்டுகளை ஊக்கப்படுத்தும் நோக்கில், கிரீடா என்ற நிறுவனமும், மெட்ரோ ரயில் நிர்வாகமும் இணைந்து மெட்ரோ ரயில் நிலையங்களில் நாள்தோறும் 2 மணி நேரம் பாரம்பரிய விளையாட்டுகளை நடத்தி வருகின்றன.

ஒரு மாதம் நடைபெறும் இந்த விளையாட்டுகள், ஜூலை 16 -இல் நந்தனம் ரயில் நிலையத்திலும், ஜூலை 17 -இல் கிண்டி ரயில் நிலையத்திலும், ஜூலை 18-இல் அரும்பாக்கம் ரயில் நிலையத்திலும் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து, அசோக் நகர் ரயில் நிலையத்தில் வியாழக்கிழமை மாலை பாரம்பரிய விளையாட்டு விழா நடைபெற்றது. பல்லாங்குழி, ஆடுபுலி ஆட்டம், கட்டம் விளையாட்டு, நாலுகட்ட தாயம் உள்பட பல்வேறு விளையாட்டுகள் இதில் இடம்பெற்றிருந்தன. மெட்ரோ ரயில் பயணிகள், மாணவர்கள் என்று பல்வேறு தரப்பினர் ஆர்வத்துடன் பங்கேற்று விளையாடினர்.